டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 21.9.2024 சனிக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 080 - Madurai | Online Edition

# காரீஃப் பருவ கால வேளாண் உற்பத்தி குறித்து ஆலோசனை கூட்டம்

## மத்திய வேளாண் துறை நடத்தியது

புது தில்லி, செப்.20

இம்மாத தொடக்கத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின் தொடர்ச்சியாக, வேளாண், விவசாயிகள் நலத்துறை ஆலோசகர் ருச்சிகா குப்தா தலைமையில் புதுதில்லியில் உள்ள கிருஷி பவனில் 19.9.24ல் பங்குதாரர்களின் இரண்டாவது சுற்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. காரீஃப் பருவத்திற்கான முதல் முன்கூட்டிய மதிப்பீடுகளை வெளியிடுவதற்கு முன்னதாக, பருத்தி, கரும்புடன் தானியங்கள் மற்றும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

கிரிசில் ஆராய்ச்சி, அக்ரிவாட்ச், இந்திய பருப்பு வகைகள் மற்றும் தானிய சங்கம், இந்திய எண்ணெய் வித்துக்கள் மற்றும் உற்பத்தி ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில், இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சிலின் எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிறுவனம், இந்திய பருத்தி கழகம், உணவு மற்றும் பொது விநியோகத் துறை, கோதுமை, கரும்பு, அரிசி, எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருத்தி பயிர் மேம்பாட்டு இயக்குநரகங்கள், நுகர்வோர் விவகாரங்கள் துறை (DOCA) உள்ளிட்ட முக்கிய தரப்பினர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். பங்குதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப நிலை அறிக்கைகளின்படி, நெல் மற்றும் மக்காச்சோள உற்பத்தி எதிர்வரும் பருவத்தில் நம்பிக்கைக்குரியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், பயிர் மாற்றுத் தன்மை காரணமாக இந்த பருவத்தில் பருத்தி குறைவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அமைச்சகத்துக்கும் தொழில்துறை நிபுணர்களுக்கும் இடையில் தொடர்ச்சியான ஒத்துழைப்பு நிலையான தகவல் பகிர்வின் முக்கியத்துவத்தை பங்குதாரர்கள் ஒரு மனதாக வலியுறுத்தினர். பயிர் உற்பத்தி முன்னறிவிப்பில் அதிக துல்லியத்தை அடைவதில் இந்த முயற்சி ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது.

# உங்களைத் தேடி, உங்கள் ஊரில் திட்டத்தில் ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் மாவட்ட ஆட்சியர் ஆய்வு

கோயம்புத்தூர், செப்.20

பிரதி மாதம்தோறும் மூன்றாவது புதன்கிழமையில் தமிழக முதலமைச்சரால் ஏற்படுத்தப்பட்ட உங்களைத் தேடி, உங்கள் ஊரில் திட்டமானது செப்டம்பர் 2024 மாதத்தில் 18.09.24 மற்றும் 19.09.24 ஆகிய இரு தினங்களில் கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் நடைபெற்றது.

இத்திட்டத்தின் இரண்டாம் நாளான 19.09.2024 அன்று வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையினை மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி, மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், ஆகியோர் பார்வையிட்டனர். உழவர் சந்தையின் செயல்பாடு, விவசாயி களின் வருகை, நுகர்வோர்களின் கருத்துகள் போன்றவை குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின்போது உழவர் சந்தையின் நிர்வாக அலுவலர் சாம் ரெவேல், உழவர் சந்தையின் தினசரி செயல்பாடுகள், காய்கறிகளின் வரத்து, திட்டங்கள் செயல்பாடு குறித்து கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்தார்.

கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் மொத்தம் 170 கடைகள் உள்ளன. நாள்தோறும் 130 முதல் 155 விவசாயி களும், 4500 முதல் 6000 வரையிலான நுகர்வோர்களும் பயனடைகின்றனர்.

மேலும் நாளொன்றுக்கு சராசரியாக ரூ.25 இலட்சம் மதிப் பிலான 50 மெ.டன் காய்கறிகள், பரிவர்த்தனைகள் நடைபெறு கின்றன. சென்ற வருடம் 2023-24 ஆம் ஆண்டில் 17,967 மெ.டன் காய்கறி வரத்தும் ரூ.69.68 கோடி மதிப்பிலான காய்கறிகளும் சந்தையில் விற்பனை மேற்கொள்ளப்பட்டது. இச்சந்தை தமிழகத்தில் அதிகப்படியாக விற்பனையாகும் ஒரு முக்கிய சந்தையாக கடந்த 25 வருடங்களாக மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இச்சந்தையில் இல்லம் தேடி பண்ணைக் காய்கறிகள் என்ற திட்டத்தின் மூலம் நான்கு வாகனங்கள்

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

பயன்பாட்டில் உள்ளன. சந்தை வளாகத்தில் அமைந்துள்ள காய்கறி கழிவுகளை உரமாக மாற்றக்கூடிய இடத்தினையும் பார்வையிட்டார்.

இவ்வாய்வின்போது மல்லிகா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை), கோவை, மீனாம்பிகை, வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) கோவை, கோவிந்தன், வருவாய் கோட்டாட்சியர், கோயம்புத்தூர் வடக்கு, ஹில்டா, வேளாண்மை அலுவலர்(வேளாண் வணிகம்), கோவை மற்றும் ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையின் உதவி நிர்வாக அலுவலர்கள் கோபால்சாமி, தேவாம்பிகா ஆகியோரும் உடனிருந்தனர்.


# தலைக் கவசம் உயிர்க் கவசம் முறையாக தலைக் கவசம் அணிவோம்





அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# திரும்பும் திசையெல்லாம் நிலங்கள் உழவு கட்டியாக தெரிகிறது?



தூத்துக்குடி, செப்.20

தூத்துக்குடி மாவட்டத்தில் தென்பகுதி, வடபகுதி என இரு பிரிவுகளாக விவசாயம் செய்யப்படுகிறது. தென் பகுதியில் திருச்செந்தூர், சாத்தான்குளம், ஸ்ரீவைகுண்டம் ஆகிய பகுதிகளில் தாமிரபரணி வடிகால் பாசனமும், கயத்தாறு, ஓட்டப்பிடாரம், விளாத்திகுளம், எட்டயபுரம், கோவில்பட்டி ஆகிய பகுதிகளில் மானாவாரி விவசாயமும் செய்யப்படுகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் மானாவாரி விவசாயம் ஆண்டுக்கு ஒரு முறை புரட்டாசி மாதம் பெய்யக்கூடிய பருவ மழைக்கு பயறு வகைகள், சிறுதானியங்கள், பணப் பயிர்கள், எண்ணெய் வித்துக்கள் என பல்வேறு பயிர்கள் பயிரிடப்படுகிறது. ஆண்டு தோறும் விநாயகர் சதுர்த்திக்கு புரட்டாசி பருவத்திற்கான மழைக் கான அச்சாரம் தொடங்கும். முதற்கட்டமாக மக்காச்சோளம், பருத்தி விதைகளை விவசாயிகள் ஊன்றுவர்கள். அதன் பிறகு வெள்ளைச் சோளம், உளுந்து, பாசி விதைப்பு செய்வார்கள். ஆவணி கடைசி வாரம் முதல் இப் பணியை தொடங்கக்கூடிய விவசாயிகள் தற்போது பத்து நாட்களுக்கு மேலாக வீசி வரும் வெப்பக்காற்று மற்றும் வெயிலால் நிலங்களில் ஈரப்பதம் உலர்ந்து உழவு செய்யக்கூட கடினமாக உள்ளது. இதனால் நிலங்கள் அனைத்தும் உழவு செய்யப்பட்டு கருங்கட்டியாக உள்ளது. இந்நிலையில் புரட்டாசி முதல் வாரத்தில் மழைக்கு வெள்ளைச்சோளம் விதைப்பு செய்து புரட்டாசி 20ஆம் தேதிக்கு முன்னர் வெள்ளைச் சோளம் முளைத்து பயிராக வேண்டும். அவ்வாறு இல்லாமல் புரட்டாசி 20க்கு பின்னர் விதைப்பு முளைக்கும் பயிர்களில் கதிர் பிடித்தாலும் மகரந்த சேர்க்கை செய்ய முடியாமல் கதிர்கள் மலட்டுத் தன்மை ஏற்பட்டு அது மணி பிடிக்காமல் போய்விடும். அதனால்தான் அக்காலத்தில் பெரியவர்கள் வெள்ளைச் சோளம் விதைத்தால் சொல்லிவிதை என்பார்கள். வெள்ளைச் சோளம் விதைப்பு செய்யும்போது சுற்றியுள்ள விவசாயிகளும் வெள்ளைச்சோளம் ஒன்று போல் விதைக்க வேண்டும் இல்லை என்றால் ஒவ்வொருவரும் இடைவெளிவிட்டு தாமதமாக விதைத்தால் பயிர்களில் கதிர்கள் மணி பிடிக்காது. தவிர மக்காச்சோளம் ஊன்றும் போது நிலத்தில் ஈரப்பதம் இருக்க வேண்டும்.

நிலத்தில் ஈரப்பதம் இன்றி இருந்தால் ஒரு சில நாட்களில் விதைகள் கெட்டுப் போய்விடும். தவிர பருத்தி விதைகளும் தற்போது ஊன்றி வருகின்றனர். இந்நிலையில் விவசாயிகள் மழையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

தற்போது உள்ள சூழ்நிலையில் மழை இன்னும் 15 நாட்கள் பிந்தும் என அனுபவம் வாய்ந்த மூத்த விவசாயிகள் கருது கின்றனர். இந்நிலையில் கடந்த ஆண்டு விநாயகர் சதுர்த்தி அன்று மழை அச்சாரம் செய்தது. அதன் பின் அடுத்தடுத்து மழை பெய்ததால் பயிர்கள் நன்று வளர்ந்து கதிர் பிடிக்கும் தருவாயில் டிசம்பர் மாதம் 16 மற்றும் 17 ஆகிய தேதிகளில் பெருமழை பெய்து பயிர்கள் அனைத்தும் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இந்த ஆண்டு வறட்சியால் விவசாயம் பாதிக்கப்படுமா என விவசாயிகள் மிகவும் அச்சத்தில் உள்ளனர். தற்போது உள்ள நிலையில் விதைகள் விலையும் கூடியது. உரங்களும் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. வருணை பகவான் கருணை செய்ய வேண்டும் என்பதே ஒட்டுமொத்த விவசாயி களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

விவசாய நண்பர்களே ...
விவசாயம் சம்பந்தமாக உங்கள் சந்தேகங்களுக்கு...
ரிலையன்ஸ் பவுண்டேசனின்
கட்டணமில்லா உதவி தொலைபேசி எண்ணில் விளக்கம் பெறலாம்
1800-419-8800
Reliance Foundation

இந்நிலையில் 2023-2024 பயிர் காப்பீடு செய்யப்பட்ட பயிர்களுக்கு பயிர் காப்பீடு விடுவிக்கப்பட்டுள்ளது. அதில் உளுந்து, பாசி, மக்காச்சோளம் ஆகியவற்றுக்கு கடந்த இரண்டு நாட்களுக்கு முன் விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் மற்ற பயிர்களான கொத்தமல்லி, வெங்காயம், மிளகாய், வெள்ளைச் சோளம், கம்பு, சூரியகாந்தி பருத்தி ஆகியவற்றிற்கும் பயிர் காப்பீடு விடுவிக்கப்பட வேண்டும். பயிர்காப்பீட்டை எதிர்பார்த்து விவசாயிகள் விவசாயம் செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே பயிர் காப்பீடு உடனடியாக விடுவிக்க வேண்டும் என கரிசல் பூமி தலைவர் வரதராஜன் மற்றும் பல்வேறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 20.09.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 35 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 30 | 35 | 57 | உருளை (பிற) | 36 | 40 |
| 1B | கத்திரி(Nadu) | 50 | 54 | 57A | உருளை(ஊட்டி) | 60 | 66 |
| 2 | வெண்டை | 25 | 28 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 24 | 28 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 36 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 20 | 24 | 60 | கேரட் | 60 | 70 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 35 | 38 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 48 |
| 6 | புடலை | 25 | 30 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன் | 28 | 32 | 63 | டர்னிப் | 45 | 50 |
| 8 | சுரைக்காய் | 18 | 24 | 64 | மு.கோஸ் | 18 | 22 |
| 9 | பாகற்காய் | 30 | 34 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 25 | 28 | 66 | காளிபிளவர் | 50 | 58 |
| 11 | பூசணி | 15 | 18 | 67 | பட்டாணி | 190 | 200 |
| 12 | அரசாணி | 15 | 18 | 68 | பூண்டு | 260 | 314 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 30 | 35 | 69 | இஞ்சி | 60 | 136 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 30 | 35 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 42 | 46 | 71 | பென்னி பீன்ஸ் | 45 | 50 |
| 16 | பெ.வெங்காயம் | 50 | 54 | 72 | குடமிளகாய் | 48 | 55 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 22 | 25 | 73 | ஊட்டி அவரை | 120 | 140 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 54 | 74 | பஜ்ஜி மிளகாய் | 40 | 45 |
| 19 | முருங்கை | 40 | 45 | 71A | | | |
| 20 | தேங்காய் | 42 | 45 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 60 | 65 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 90 | 95 | 75 | எலுமிச்சை | 130 | 140 |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 58 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 48 | 78 | பப்பாளி | 35 | 38 |
| 28 | கறிவேப்பிலை | 25 | 30 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 110 | 115 | 80 | திராட்சை | 100 | 110 |
| 30 | புதினா | 10 | 11 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 45 | 50 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 75 | 80 |
| 40 | கோவக்காய் | 28 | 32 | 91 | பூவன் | 50 | 55 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 18 | 22 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 40 | 45 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 28 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 60 | 64 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 32 | 38 | | | | |

# இப்கோ - நானோ யூரியா பிளஸ்

நானோ யூரியா பிளஸ் 20% தழைச்சத்து கொண்டது. பயிர்களுக்கு தேவையான தழைச்சத்தை திறம்பட பூர்த்தி செய்து, பயரின் வளர்ச்சியை அதிகரிக்கும். மேலும் நுண்ணூட்டச் சத்துக்களின் செயல்திறன் மற்றும் கிடைக்கும் தன்மையை அதிகரிக்கும்.

## பயன்படுத்தும் முறை

ஒரு மூடி நானோ யூரியா பிளஸ் பாட்டிலின் அளவு=25 மி. லி.

## இலை வழி தெளிப்பு

2 -4 மி.லி. நானோ யூரியாவை ஒரு லிட்டர் நீரில் கலந்து பயிரின் முக்கிய வளர்ச்சி பருவங்களில் (கிளைப்பு, தூர் விடும் தருவாயில்) முதல் தெளிப்பாகவும், முதல் தெளிப்பு தெளித்த 20-25 நாட்களுக்கு பிறகு அல்லது பூக்கும் பருவத்திற்கு முன்பு இரண்டாம் தெளிப்பு தெளிக்கலாம்.




(குறிப்பு: யூரியா, டி.ஏ.பி அடி உரத்தை தவிர்க்க வேண்டாம். மேல் உரமாக அளிக்கப்படும் யூரியாவை தவிர்த்து நானோ யூரியா பிளஸ் திரவ உரத்தை பயன்படுத்தவும்.) ஒரு ஏக்கருக்கு 250-500 மி. லி. நானோ யூரியா பிளஸ் பயன்படுத்தவும்.

**தெளிப்பான்கள் பொருத்து நானோ யூரியா பிளஸ் அளவு**

**பேட்டரி தெளிப்பான்**

15-16 லிட்டர் டேங்கிற்கு 2 மூடி (50-75 மி.லி.) பயன் படுத்தவும். (பொதுவாக ஒரு ஏக்கருக்கு 8 முதல் 10 டேங்க் போதுமானது).

**விசை தெளிப்பான்**

20-25 லிட்டர் டேங்கிற்கு 3-4 மூடி (75-100 மி.லி.) பயன்படுத்தவும். (பொதுவாக ஒரு ஏக்கருக்கு 4 முதல் 6 டேங்க் போதுமானது).

**ட்ரான் தெளிப்பான்**

10-12 லிட்டர் டேங்கிற்கு 250-500 மி.லி. நானோ யூரியாவை பயன்படுத்தவும். (பொதுவாக ஒரு ஏக்கருக்கு 1 டேங்க் போது மானது).

இப்கோ நானோ உரங்கள் சங்கட ஹரன் பீமா யோஜனா-வின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

- ADVT.

# நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறைகள் குறித்த பயிற்சி

புதுக்கோட்டை, செப்.20

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்க திட்டங்களின் சீரமைப்பு திட்டம் 2024-2025 கீழ் அறந்தாங்கி வட்டார கரும்பு சாகுபடி செய்யும் 40 விவசாயிகளுக்கு நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறைகள் குறித்த பயிற்சி திருநாளூர் கிராமத்தில் நடைபெற்றது. பயிற்சியில் கோத்தாரி சர்க்கரை ஆலையின் புதுக்கோட்டை கரும்பு மேலாளர் செந்தில் வேல் கலந்துகொண்டு ஒரு பரு கருணை கரும்பு நாற்று பயன்பாடு மற்றும் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறையில் விவசாயிகளுக்கு ஏற்படும் நன்மைகள் அதன் தொழில்நுட்பங்கள் எடுத்துக் கூறினார். மேலும் இந்த முறையில் கரும்பு சாகுபடி செய்யும் போது இயந்திரம் மூலம் அறுவடை செய்வது எளிதாகிறது.

இதனால் கரும்பு அறுவடை கூலித்தொகை குறைகிறது விளைச்சல் அதிகரிக்கிறது வருமானமும் அதிகரிக்கிறது. அனைத்து விவசாயிகளையும் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி தொழில்நுட்பத்தை பயன்படுத்துமாறு அவர் அன்புடன் கேட்டுக் கொண்டார். பயிற்சியில் கலந்து கொண்ட வேளாண்மை உதவி இயக்குனர் பத்மபிரியா துறை சார்ந்த திட்டங்களை எடுத்துக் கூறினார்கள். மேலும் உயிர் உரம் பயன்பாடு பற்றி சிறப்பாக கூறினார். பயிற்சியில் கலந்து கொண்ட கரும்பு விவசாயிகளின் சந்தேகங்கள் தெளிவான முறையில் பதில் அளித்து பயிற்சி சிறப்பாக நடைபெற்றது. பயிற்சியினை வட்டார தொழில்நுட்ப மேலாளர் சரவணன் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் ஆனந்தராஜ் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.



# கலப்பு உரங்களை அனுமதியின்றி விற்றால் கடும் நடவடிக்கை வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

புதுக்கோட்டை, செப்.20

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கு சாகுபடிக்கு தேவையான போதுமான உரம் கையிருப்பு உள்ளதாக வேளாண்மை இணை இயக்குநர் (பொ) வி.எம்.ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், மாவட்டத்தில் நெல், உளுந்து, மக்காச்சோளம், நிலக்கடலை, கரும்பு ஆகிய பயிர்களும், மா, முந்திரி, தென்னை, வாழை, காய்கறிகள் உள்ளிட்ட தோட்டக்கலைப் பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது விவசாயிகள் சம்பா சாகுபடி மேற்கொண்டு வரும் நிலையில் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர் மற்றும் பிற பயிர்களுக்கு தேவையான யூரியா 5463 மெட்ரிக் டன்கள், டிஏபி 1209 மெட்ரிக் டன்கள், பொட்டாஷ் 850 மெட்ரிக் டன்கள், காம்ளக்ஸ் 5166 மெட்ரிக் டன்கள், சூப்பர் 900 மெட்ரிக் டன்கள் ஆகியன தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் விவசாயிகள் சாகுபடிக்கு தேவையான உரங்களை மண்வள அட்டையின் பரிந்துரைப்படி இட்டால் உரச்செலவை குறைப்பதோடு, மண்வளமும் மேம்படும், நெல் சாகுபடியில் யூரியா உரங்களை இடும் பொழுது பிரித்து பிரித்து இட வேண்டும். யூரியாவுடன் ஜிப்சம் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு ஆகியவற்றை 5:4:1 என்ற விகிதத்தில் கலந்து இட வேண்டும். ஒரு ஏக்கருக்கு ஒரு தெளிப்பிற்கு அதிகபட்சமாக 26 கிலோ விற்கு மேல் நெற்பயிருக்கு இடக்கூடாது. அதிகமாக இடும் பொழுது பூச்சி மற்றும் நோய் தாக்குதல் அதிகமாவதோடு, முதிர்ச்சி பருவத்தில் நெற்பயிர் சாய் வதற்கும் வழி வகுக்கின்றது.

மேலும் விவசாயிகள் டிஏபி உரங் களுக்கு பதிலாக சூப்பர் பாஸ்பேட் மற்றும் காம்ளக்ஸ் உரங்களை பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. சூப்பர் பாஸ்பேட் உரத்தில் 16 சதவீதம் மணிச்சத்து மற்றும் சல்பர், கால்சியம் போன்ற நுண்ணூட்ட சத்துக்கள் சிறிதளவு உள்ளன. சூப்பர் பாஸ்பேட் உரம் உள்நாட்டிலேயே தயார் செய்யப்பட்டு எளிதில் கிடைக்கிறது. சூப்பர் பாஸ்பேட் உரத்தின் மூலம் பயிர்களுக்கு கால்சியம் மற்றும் சல்பர் சத்து கூடுதலாகக் கிடைக்கிறது. மேலும் நீரில் கரையும் மணிச்சத்து கிடைப்பதால் பயிரின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது.

மொத்த உர விற்பனையாளர்கள், வெளிமாவட்டங்களுக்கு மானிய உரங்களை ஏற்றுமதி செய்வதும், வெளி மாவட்டங்களிலிருந்து கொள்முதல் செய்வதும் கூடாது எனவும், மேலும் சில்லரை உர விற்பனையாளர்களுக்கு அனுப்பும் பொழுது உரிய பட்டியல்கள் மற்றும் ஆவணத்துடன் உரங்களை வாகனங்களில் அனுப்ப வேண்டும், தவறும் பட்சத்தில் உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985ன் படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. உர விற்பனையாளர்கள் உர உரிமத்தில் அனுமதி பெறாத இடங்களில் உரத்தினை இருப்பு வைப்பதும், உரிமத்தில் அனுமதி பெறாத நிறுவனங்களிடமிருந்து உரங்கள், கலப்பு உரங்கள் மற்றும் நுண்ணூட்ட கலவை உரங்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்வதும், அதனை விவசாயிகளுக்கு விற்பனை செய்வதும் கூடாது. அனுமதி பெறாத நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் மற்றும் விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் உர உரிமம் ரத்து செய்யப்படும் என புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) வி.எம். ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

# வேம்பு நடவு செய்ய வேளாண் துறை அழைப்பு

கள்ளக்குறிச்சி, செப்.20

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வேளாண்மைத்துறையின் மூலம் வேம்பு நடவு செய்யும் விவசாயிகளுக்கு தேசிய எண்ணெய் வித்துக்கான இயக்கம் மரப்பயிர்கள் திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்படுகிறது.

வேம்பின் இலை, பூ, எண்ணெய் மற்றும் புண்ணாக்கு போன்ற அனைத்து பொருட்களும் அங்கக வேளாண்மை, பயிர் பாதுகாப்பு மற்றும் அடியுரமாக பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. மண் அரிமானத்தை தடுப்பதிலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இத்தகைய மகத்தான பயன்களை கொண்ட வேம்பு மரத்தினை விவசாயிகள் தரிசாக உள்ள நிலங்களில் நடவு செய்ய எக்டருக்கு ரூ.17000 மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தினை இம்மாவட்டத்தில் செயல்படுத்திட மத்திய மாநில அரசு நிதி உதவியுடன் 10 எக்டருக்கு ரூ.1.70 இலட்சம் ஆண்டு இலக்கு பெறப்பட்டுள்ளது. ஊடுபயிர் மற்றும் பராமரிப்பு செய்வதற்கு ரூ.3000 மானியம் வழங்கப்படுகிறது. எனவே வேம்பு நடவு செய்வதற்கு ஆர்வம் காட்டும் விவசாயிகள் உழவன் செயலியின் மூலம் பதிவு செய்து பயன்பெறலாம். மேலும் திட்டம் சார்ந்த தகவலுக்கு அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தினை தொடர்பு கொண்டு பயனடையுமாறு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அசோக்குமார் தெரிவித்துள்ளார்.


Stanes
BIO NEMATON
Bio Pesticide
Paecilomyces lilacinus
பயோ நெமட்டான்
பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?
பயன்படுத்துவீர்...
பயோ நெமட்டான்
"நூற்புழுக்களின் எதிரி"
இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.
அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.
வேர் முடிச்சுகள்
வேர் வீக்கம்
வேர் அழுகல்
டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com
84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948
திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935
வேலூர் : 91 93449 14938

# டி.ஏ.பி உரத்திற்கு மாற்றாக சூப்பர் பாஸ்பேட் பயன்படுத்தலாம். தெரியுமா?




தற்போது நெல் நடவு பணி மற்றும் மானாவாரியில் பருத்தி பயறுவகைகள் விதைப்பிற்கு விவசாயிகள் தயாராக உள்ளனர். அடியுரமாக இட மண் பரிசோதனை படி உரமிட, உரம் வாங்க கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் உரக்கடையில் விவசாயிகள் அலைமோதி வருகின்றனர். போதுமான உரங்கள் இருப்பில் இருந்தால் சாகுபடி செலவை குறைக்க டி.ஏ.பி உரத்திற்கு மாற்றாக ‘சூப்பர் பாஸ்பேட் உரத்தை பயன்படுத்துவதால் உரச் செலவு குறைவதுடன் கூடுதலான மகசூல் கிடைக்கும் என்பது பலருக்கும் தெரியாத விசயமாக உள்ளது.

1) சூப்பர் பாஸ்பேட் (SUPER PHOSPHATE) உரமானது மணி சத்தை தரக்கூடிய உரங்களில் முதன்மையானது. இது உள்நாட்டிலே தயாரிக்கப்படுவதால், டி.ஏ.பி உரத்தை விட விலை குறைவு. இது ராக் பாஸ்பேட் என்ற தாதுவிலிருந்து, சல்பூரிக் அமிலத்துடன் வினைபுரிந்து தயாரிக்கப்படும் உர மாகும். இது சிங்கள் சூப்பர்பாஸ்பேட் (SSP) மற்றும் TRIPLE SUPER (TSP ) அம்மோனியம் பாஸ்பேட் வடிவில் கிடைக்கிறது. எங்கும் எளிதாக கிடைக்கிற சூப்பர் பாஸ்பேட் தான்.

**சூப்பர் பாஸ்பேட்டில் என்ன என்ன சத்துகள் உள்ளன?**

சூப்பர் பாஸ்பேட்யில், மணிசத்து (P) 16% யும் இரண்டாம் நிலை சத்துகளான கால்சியம் (சுண்ணாம்பு) 21%யும் சல்பர் 11% (கந்தகம்) சத்துகள் உள்ளன.

**சூப்பர் பாஸ்பேட் நிலத்தில் இடுவதால் என்ன நிகழும்?**

1) சூப்பரில் உள்ள மணிசத்து நீரில் எளிதாக கரைவதால் பயிருக்கு எளிதில் கிடைக்கிறது.

2) அடியுரமாக எல்லாவிதமான பயிர்களுக்கு குறிப்பாக எண்ணெய் வித்து பயிர்களுக்கு ஏற்றது.

3 ) வேர்வளர்ச்சிக்கு பெரிதும் உதவுவதோடு மட்டுமல்லாது நிலத்தில் கிட்டாநிலையில் உள்ள மணிசத்தை கிரகிக்க உதவும்.

4) இரண்டாம் நிலைசத்துகளில் இரண்டு சத்துகளான கால்சியம், சல்பர் இருப்பதால் வேர் வளர்ச்சி மட்டுமல்லாது நிலத்தின் மண்வள மேம்படும்.

5) இதனை பயன்படுத்தினால் நிலத்தின் உப்பு நிலை (SALT) டி.ஏ.பி உரத்தை பயன்படுத்துவதை விட மிக குறைவு.

6) எளிதில் கிடைப்பதுடன் குறைந்த விலையில் அதாவது ஒரு மூட்டை 700க்கு ( 50 KG ) கிடைக்கிறது. ஆனால் ம்புஊெ உரமானது 50 கிலோ 1350க்கு கிடைக்கிறது.

**ஏன் டி.ஏ.பி. உரத்திற்கு மாற்றாக சூப்பர்பாஸ்பேட் பயன் படுத்துவதற்கு ஏதேனும் காரணம் உண்டா?**

1) விலை குறைவு

2) எண்ணெய் வித்து பயிர்களான நிலக்கடலை, எள் சூரிய காந்தி பயிருக்கு ஏற்றது.

3) பாசி படரும் நெல் வயலில் டி.ஏ.பி இடுவதால் அதிகமாக பாசி (ALAGE) உற்பத்தியாகும் அந்த மாதிரியான நிலங்களுக்கு சூப்பர் பாஸ்பேட் உரம் ஏற்றது.

4) டி.ஏ.பி உரம் தயாரிக்க வெளிநாடுகளிலிருந்து பாஸ்பாரிக் அமிலம் இறக்குமதி செய்யப்படுவதால் அன்னிய செலவாணி அதிகமாகும், இதனை குறைத்திட சூப்பர் பாஸ்பேட் ஏற்றது.

5) டி.ஏ.பி யில் முதன்மையான பேரூட்ட சத்துகள் மட்டும் (N.18%) (P.46%) யும் உள்ளது. சூப்பரில் உள்ள இரண்டாம் நிலை சத்துகள் இல்லை.

6) சில சமயங்களில் உள் நாட்டிலே டி.ஏ.பி உற்பத்தி குறைந்து, வெளிநாட்டுல இறக்குமதி செய்வதால் தட்டுபாடு நிலவும். ஆனால் இந்த நிலை சூப்பர் பாஸ்பேட்டிற்கு வர வாய்ப்பு இல்லை. இது முழுக்க முழுக்க உள் நாட்டிலே தயாரிக்கபடுகிறது.

எனவே விவசாயிகள் கணிசமாக சாகுபடி செலவை குறைக்க மண்பரிசோதனை செய்து பரிந்துரைகேற்ப உரமிட வேண்டும் அல்லது பொதுபரிந்துரைபடி கூட்டு உரங்கள் டி.ஏபி உரங் களை இடுவதை விட தனியாக தனியாக (STRIGHT FERTILIZERS) இடுவதால் உரச்செலவு குறைய வாய்ப்புள்ளது.

மண்வளத்தை காக்க அளவோடு உரமிட்டு அதிக மகசூல் எடுப்போம். தற்போது ஒரு ஏக்கரில் ஓராண்டில் ஒரு லட்சம் வருமானம் பெற வேண்டும் என்ற இலக்குடன் விவசாயிகள் பயணிப்பதால், சாகுபடிக்கான செலவை கணிசமாக குறைக்க இந்த தனித்தனியான உரங்களை (யூரியா, சூப்பர், பொட்டாஷ்) இடுவதே பயனுள்ள வகையில் உரச்செலவு குறையும். எதிர் பார்த்த மகசூலும் வீடு வந்து சேரும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# ஆற்றல் திறன் நிர்வாகம் குறித்த விழிப்புணர்வு

மதுரை, செப்.20

மதுரை வேளாண்மை கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 19.9.24 வேளாண்மை துறையில் தேவைக்கு ஏற்ப ஆற்றல் மற்றும் திறன் நிர்வாகம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி வெகுவிமர்சையாக நடத்தப் பட்டது. நிகழ்ச்சிக்கு வேளாண்மை கல்லூரி முதன்மையர் முனைவர் பே.ப.மகேந்திரன் தலைமை ஏற்றார்.

இந்நிகழ்ச்சிக்கு கோயம்புத்தூரில் இருந்து விரிவாக்க கல்வி இயக்குநர் முனைவர் பி.பொ.முருகன், தமதுவாழ்த்துரைகளை வழங்கினார். மேலும் முனைவர் செந்தில்குமார் இத்திட்டத்தின் நோக்கங்களை காணொளி மூலம் எடுத்துரைத்தார்.

வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங் கிணைப்பாளர் முனைவர் இ.சுப்பிரமணியன் வேளாண்மை உழவியல் தொழில்நுட்பங்களில் ஆற்றல் திறன் நிர்வாகம் பற்றி எடுத்துரைத்தார்.

பொறியாளர் மோனிஷா செல்வன், வேளாண்மை பொறியியல் துறையின் நவீன கால இயந்திர மயமாக்கல், விவசாயிகளுக்கான ஏற்படுத்தப்பட்ட செயலிகள் போன்ற வற்றை கூறி, பயன் பெறுமாறு கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் 50க்கும் மேற்பட்ட விவசாயப் பெருமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள்.

இந்த ஆற்றல் மற்றும் திறன் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்ககம், தமிழ்நாடு அரசு மின்வாரியம், ஒன்றிய அரசின் அதிகார அமைச்சகத்தின் கீழ்வரும் ஆற்றல் திறன் பணியகம் போன்ற பல நிர்வாக அமைப்புகள் இணைந்து நடத்திய விழிப்புணர்வு நிகழ்ச்சியாகும்.

முனைவர் லூ.நிர்மலா, பேராசிரியர் வரவேற்புரை நிகழ்த்தினார். முனைவர் கு.ஆனந்த், இணை பேராசிரியர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து நடத்தினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# 300 ஏக்கரிலிருந்து 30 ஏக்கர் வெற்றிலை கொடிக்கால் சாகுபடி – ஓர் ஆய்வு



மதுரை மாவட்டம் முழுவதும் சோழ வந்தான், தென்கரை, இரும்பாடி, கருப்பட்டி, மட்டப்பாறை, மண்ணாடி மங்கலம், முள்ளிப் பள்ளம், திருவேடகம், தேனூர், துவரிமான் போன்ற இடங்களில் இந்த வெற்றிலை விளைகிறது. மதுரைக்கு மல்லி, காஞ்சிக்கு பட்டு, சேலத்திற்கு மாம்பழம் என ஊருக்கு ஒரு பெருமை இருப்பது போல், மதுரை மாவட்டம், சோழவந்தானுக்கு பெருமை சேர்ப்பது வெற்றிலை.

**பழங்கால சிறப்பு**

சோழவந்தான் பகுதியில், சாகுபடி செய்யப்படும் வெற்றிலை யானது தொன்மையான சிறப்பு கொண்டவை என்பதற்கு சான்றாக கல்வெட்டுகளும், சங்க கால இலக்கியங்கள் பலவற்றில் பாடல்களும் இடம் பெற்றுள்ளன.

மதுரையில் வெற்றிலை சாகுபடி பற்றி கி.பி 2-4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புகழ்பெற்ற தமிழ் இலக்கியப் பகுதியான 'மதுரைக்காஞ்சி' குறிப்பிடப்பட்டுள்ளது. வெற்றிலை கொடி சாகுபடி பற்றிய விவரங்கள் கிபி 5 ஆம் நூற்றாண்டில் 'ஜெனக நாராயண சாமி பெருமாள், சோழவந்தான்' என்ற புகழ்பெற்ற கோவிலின் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. கல்வெட்டில் கூறப்பட்டு உள்ளதாவது : சோழவந்தான் பகுதியில் உள்ள வெற்றிலை விவசாயிகள், வெற்றிலை சாகுபடியில் கிடைக்கும் வருமானத்தை ஜெனக நாராயண பெருமாள் கோயிலுக்கு வழங்க வேண்டும்.

தமிழகத்திலேயே, சோழவந்தான் வெற்றிலை தான் மிகவும் சிறந்தது என்ற அடிப்படையில், ஐரோப்பியர்கள் இங்கு வந்து வெற்றிலை வாங்கிச் சென்றதாக பரவலாக பேசப்படுகிறது.

**சோழவந்தான் வெற்றிலை – புவிசார் குறீயிடு**

வைகை ஆற்றங்கரையோரத்தில் அமைந்துள்ள சோழவந்தான் மற்றும் அதன்சு ற்று வட்டாரப் பகுதிகளில் பயிரிடப்படும் வெற்றிலைகள் மிகவும் பிரபலமானவை. வண்டல் மண்ணில் பயிரிடப்படுவதால் இந்த வெற்றிலையின் சுவை, மனம் உள்பட பிரத்யேக தரம் கொண்டவை. குறைவான காரத்தன்மை உடைய இந்த வெற்றிலைகளை ஏராளமான மக்கள், உடல் நலன்களை பேணும் நோக்கில் உண்டு வருகின்றனர்.

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுகாவிற்கு உட்பட்ட சோழ வந்தான் பகுதியில் பயிரிடப்படும் வெற்றிலைக்கு புவிசார் குறியீடு வழங்க வேண்டும் என்று மதுரை மாவட்ட ஊரக கல்வி மற்றும் வளர்ச்சி மையம் சார்பில் விண்ணப்பிக்கப்பட்டது. சோழவந்தான் வெற்றிலை கொடிக்கு (வெற்றிலை) புவியியல் குறியீடு (ஜிஐ) கோரி மதுரை கிராம கல்வி மற்றும் மேம்பாட்டு மையம் சார்பில் விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்து.

விண்ணப்ப செயல்முறையை MSME அறிவுசார் சொத்து வசதி மையம், NABARD மதுரை அக்ரி பிசினஸ் இன்குபேன் ஃபோரம் (MABIF) எளிதாக்கியது. மேலும் IP வழக்கறிஞரும், தயாரிப்புகளின் புவியியல் அடையாளப் பதிவுக்கான நோடல் அதிகாரியுமான P.சஞ்சய் காந்தியால் தாக்கல் செய்யப்பட்டது. சோழவந்தான் வெற்றிலைக்கு ஒன்றிய அரசு, புவிசார் குறியீடு வழங்கி பெருமைப்படுத்தி உள்ளது.

## வெற்றிலையின் சிறப்பு

மங்கல விழாக்கள் ஆனாலும் கோயில் விழாக்கள், அபிகேம், மரியாதையானாலும் முதலில் இருப்பது வெற்றிலை தான். கருவறை முதல் கல்லறை வரை சம்பிரதாயங்கள் அனைத்திலும் வெற்றிலை முக்கிய பங்கு வகிக்கிறது. வெற்றிலை பல்வேறு நோய் களை தீர்க்கும் மருத்துவ குணங்களை கொண்டது. தமிழர்களின் வாழ்வியலில் வெற்றிலைக்கு முக்கிய பங்கு உண்டு. விசேஷங்கள் அனைத்திலும் தவறாமல் இடம் பெறுவது வெற்றிலையாகும். பல்வேறு நோய்களுக்கு மருந்தாகவும் வெற்றிலை பயன்படுகிறது. வெற்றிலை வயிற்றில் இருக்கும் வாயுவை வெளித்தள்ளும் தன்மை கொண்டது. மூளை, இதயம், கல்லீரல், மண்ணீரல் ஆகியவற்றை பலப்படுத்தி ஆரோக்கியத்தை தரக்கூடியது. நரம்பு மண்டலத்துக்கு பலம் கொடுப்பதால் படிக்கும் குழந்தைகளுக்கு வெற்றிலை சாறு கொடுத்துவர ஞாபக சக்தியை அதிகரிக்கும்.

## வெற்றிலை சாகுபடி முறை

வெற்றிலை சாகுபடி செய்ய, பயிரின் காம்புகளை வெட்டி பதியம் போடுகின்றனர். மிதமான தட்பவெப்பம், மண்வளம், தண்ணீர் வசதி உள்ள பகுதிகளில் வெற்றிலை நன்கு பயிராகும். நெல் அறுவடை முடிந்த வயலைப் பக்குவப்படுத்தி, புரட்டாசி மாதத்தில் பட்டம் தயாரித்து, அகத்தி விதைகளைப் பயிரிடுவர். கார்த்திகை மாதத்தில் அகத்தி மரங்கள் சுமார் 2 அல்லது 3 அடிகள் உயரத்தில் வளர்ந்திருக்கும் நிலையில் கொடிகளை நடுவர். 40 நாள்களுக்குப் பின்னர் வெற்றிலைக்கொடியை அருகிலுள்ள அகத்திச் செடியுடன் கோரையால் பிணைத்துக் கட்டுவர்.

வெற்றிலைக் கொடிக்கு அதிக வெயில் கூடாது. நிழல் பாங்கான பகுதி தான் அவசியம். மேலும் இலையுதிர் காலத்திலும் இலை உதிராதது அகத்தி. அதனால்தான் வெற்றிலை சாகுபடிக்கு அகத்தியைத் தேர்வு செய்துள்ளனர்.

**வெற்றிலை சாகுபடி குறைய காரணங்கள்**

விவசாயிகளுக்கு நல்ல வருமானத்தை ஈட்டித்தரக் கூடிய வெற்றிலை பயிரில் வேர் அழுகல், வாடல் நோய் போன்றவற்றின் தாக்கம் அதிகமாக காணப்படுகின்றன. நோய் தாக்குதலை உரிய நேரத்தில் கட்டுப்படுத்தபடாவிட்டால் விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தும்.

**வேர் அழுகல் அல்லது வாடல் நோய்**

இந்நோய் ஒரு வகை பூசணத்தால் ஏற்படுகிறது. வெள்ளைக்கொடி மற்றும் கற்பூரி என்ற ரகங்களில் அதிகமாக இந்நோய் தாக்குதல் காணப்படும். இந்நோயின் முதல் அறிகுறியாக வெற்றிலைக் கொடிகள் திடீரென காய்ந்து விடும். கொடியின் இலைகள் மஞ்சள் நிறமாகி கீழ் நோக்கி தொங்கி விடும்.

கொடிகள் மூன்று நாட் களுக்குள் காய்ந்து விடும். நோய் தாக்குதலுக்கான கொடியின் தண்டுகளில் நீர் கோத்த புள்ளிகள் தோன்றும். பின்னர் இப்புள்ளிகள் பழுப்பு நிறமாக மாறி தண்டு முழுவதும் பரவும் தன்மைக் கொண்டது. இதனால் கொடியின் வேர் பகுதி அழுகி துர்நாற்றம் வீசும். மழை காலங்களில், நீர் வடிகால் வசதி இல்லாத பகுதிகளில் இந்நோயின் தாக்கம் அதிகமாக இருக்கும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

ஓராண்டு வயதுள்ள தரமான, நோய் தாக்காத விதைக்கொடிகளை தேர்வு செய்ய வேண்டும். விதைக்கொடிகளை 0.25 சதவீதம் போர்டியாஸ் கலவையில் 20 நிமிடங்கள் நனைய வைத்து நடவு செய்யலாம். அழுகல் நோய் தென்பட்ட கொடிகளில் 0.25 சதவீதம் போர்டியாஸ் கலவை அல்லது காப்பர் அக்ஸிகுளோரைடு மருந்தினை 15 நாட்கள் இடைவெளியில் 4 முறை தெளிக்கலாம். மழை காலங்களில் நீர் தேங்காதவாறு வடிகால் வசதிகளை ஏற்படுத்தலாம்.

கட்டுரையாளர்கள் : **பேராஜெஸிந்த், இந்துராணி, கோமுகி, முத்துலட்சுமி, பபிதா, இளங்கலை வேளாண்மை (நான்காம் ஆண்டு மாணவிகள்), வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளி, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம், திண்டுக்கல்.**

# பாரம்பரிய நெல்லையும் பட்டம் பார்த்து பயிர் செய்க!

- பாரம்பரிய நெல்லையும் பட்டம் பார்த்து பயிர் செய்ய வேண்டும். பாரம்பரிய நெல் வகைகளை மீட்டெடுக்கும் முயற்சி–யாக தமிழக அரசு விதை நெல் மற்றும் பரிசுகள் அறிவித்து ஊக்கப்படுத்தி வருகிறது.

- முறையான தொழில்நுட்பத்தினை கையாண்டால் மட்டுமே அதிக மகசூல் கிடைக்கும்.

- பாரம்பரிய விவசாயம் மற்றும் நாட்டு ரக விதைகளையும் பட்டம் பார்த்து பயிர் செய்தல் அவசியம். பட்டத்துக்கும் பருவத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு.

- பருவமழை, குளிர்காலம், கோடைக்காலம் போன்ற பருவங்களை அடிப்படையாக வைத்துதான் பட்டங்கள் கணக் கிடப்படுகின்றன. அதைத் தான் பருவத்தே பயிர் செய் என்கின்றனர்.

- ஒவ்வொரு பட்டத்திலும் அதற்கான பயிரை மாற்றி மாற்றி சாகுபடி செய்யும்போது நிலத்தின் வளம் பாதுகாக்கப்படுகின்றது.

- உதாரணமாக பாரம்பரிய நெல்லான கருப்பு கவனிக்கு ஐப்பசி மற்றும் கார்த்திகை அதாவது அக்டோபர், நவம்பர் மாதம் ஏற்ற பட்டம். இதனை பட்டம் தவறி விதைப்பதால் தூர்கள் உயர மாக வளர்ந்து கொண்டே இருக்கும். ஆனால் நெல்மணி பிடிக்காது.

- பாரம்பரிய நெல் ரகங்களை சேகரித்து உற்பத்தி பெருக்கம் செய்வது மூலமாக ஊட்டச்சத்துள்ள ஆரோக்கியமான உணவு கிடைக்கும்.

- பாரம்பரிய நெல் ரகங்களில் பூச்சி, நோய்களை எதிர்க்கும் சக்தி இயல்பாகவே இருப்பதால் பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டு ரசாயனங்கள் பயன்பாடும் குறையும்.

- பாரம்பரிய ரகங்கள் நமக்கு கிடைத்துள்ள பொக்கிம்.நாம் அதனை முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

- தமிழக வேளாண் துறையும் பாரம்பரிய நெல் ரகங்களை மீட்டெடுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# இயற்கை வேளாண்மை விவசாயிகளுக்கான ஒரு நாள் பயிற்சி மற்றும் செயல்முறை விளக்கம்




மதுரை, செப்.20

மதுரை மாவட்டத்தில் இயற்கை வேளாண்மையில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உயிர்மச்சான்று பெறும் தொழில்நுட்பங்கள் மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்து ஒரு நாள் பயிற்சி மற்றும் செயல்விளக்கம் நடத்தப்பட்டது.

இப்பயிற்சியை பெங்களூருவைச் சேர்ந்த மண்டல உயிர்ம மற்றும் இயற்கை வேளாண்மை மையம் மற்றும் மதுரை மாவட்ட விதைச்சான்று மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறையால் இணைந்து நடத்தப்பட்டது. விதைச்சான்று உதவி இயக்குநர் சி.சிங்காரலீனா வரவேற்புரை வழங்கினார். மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சுப்புராஜ், மற்றும் வேளாண்மை துணை இயக்குநர் கு.சிவ.அமுதன் பயிற்சியை துவக்கி வைத்து இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம் மற்றும் சான்று பெறுவதின் அவசியம் குறித்தும் எடுத்துரைத்தனர்.

பெங்களூருவைச் சேர்ந்த மண்டல உயிர்ம மற்றும் இயற்கை வேளாண்மை மையம் தொழில்நுட்ப அலுவலர் அர்ஜீன்சிங் மத்திய அரசின் பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் மூலம் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க மத்திய அரசு எடுத்து வரும் முயற்சிகளை எடுத்துரைத்தார். சென்னை விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு இணை இயக்குநர் ஜோதிலெட்சுமி (பொ) உயிர்ம வேளாண்மையின் முக்கியத்துவம் மற்றும் பொருட்களுக்கான சமூகத் தேவை குறித்தும் விவரித்தார்.

மதுரை மாவட்ட வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத் துறையின் துணை இயக்குநர் மெர்ஸி ஜெயராணி உயிர்ம வேளாண்மையில் விளைவித்த பொருட்களை இந்திய அளவில் சந்தைப்படுத்துதல் குறித்து எடுத்துரைத்தார். வேளாண்மை அலுவலர் சித்தார்த், மின்னணு சந்தைப்படுத்துதல் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விளக்கம் அளித்தார்.

மதுரையின் வேளாண் தொழில் முனைவோருக்கான ஊக்குவிப்பு மையத்தின் தலைமை செயல்அதிகாரி கணேசமூர்த்தி MABIF மூலம் விவசாயிகள் பயனடைவதற்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், இயற்கை வேளாண்மை செய்யும் பொருட்களை மதிப்பு கூட்டி சந்தைபடுத்தி கூடுதல் லாபம் பெறும் வழிமுறைகளையும் எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் 50 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். மதுரை மாவட்ட விதைச்சான்று மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் சி.சிங்காரலீனா மற்றும் விதைச் சான்று அலுவலர்கள் பயிற்சிக்கான ஏற்பாட்டினை செய்திருந்தனர்.



# மஞ்சுகொண்டப்பள்ளி கிராமத்தில் சிறுதானிய பயிர் சாகுபடி தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

கிருஷ்ணகிரி, செப்.20

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் (அட்மா) 2024-25-ம் ஆண்டிற்கான மஞ்சுகொண்டப்பள்ளி கிராமத்தில் சிறுதானிய பயிர் சாகுபடி தொழில்நுட்பம் பற்றி விவசாயிகளுக்கு உள்மாவட்ட அளவிலான ஒரு நாள் பயிற்சி (18.9.24) அன்று நடத்தப்பட்டது.

கிருஷ்ணகிரி வேளாண்மை இணை இயக்குநர், பச்சையப்பன், சிறுதானிய சாகுபடி தொழில்நுட்ப முறைகள் பற்றியும் புதிய இராகி இரகங்களை பயன்படுத்தி அதிக மகசூல் பெறவும், சிறு மற்றும் குறு தானியங்களான வரகு, சாமை, திணை, பனிவரகு மற்றும் குதிரை வாலி சாகுபடியை பெருக்கவும், சாகுபடி செலவை குறைத்து அதிக வருவாய் ஈட்டவும் மற்றும் கூட்டு பண்ணையத்தின் மூலம் கடன் வசதிகள் மற்றும் சந்தைபடுத்துதல் பற்றியும் விவசாயிகளுக்கு விரிவாக கூறினார்.

தளி, வேளாண்மை உதவி இயக்குநர், சி.முருகன், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் குறித்தும், மாநில வேளாண் வளர்ச்சி திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மண்ணுயிர் காப்போம் திட்டத்தின் பயன்கள் மற்றும் உயிர் உரங்கள், சூடோமோனாஸ், நுண்ணூட்ட உரங்களின் முக்கியத்துவம், பயன்கள் பற்றியும் விதை நேர்த்திசெய்வதன் முக்கியத்துவம் பற்றியும் விதைநேர்த்தி செய்யும் முறைகள் பற்றியும் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் பயன்கள் பற்றியும் விவசாயிகளுக்கு கூறினார்.

இப்பயிற்சியில் பயிற்சியாளராக கலந்து கொண்ட அதியமான் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் உதவி பேராசிரியர் பழனியப்பன் உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் கொண்டு விதை நேர்த்தி செய்யும் முறைகள் பற்றியும் சாகுபடி தொழில்நுட்ப முறைகள் பற்றியும் உர மேலாண்மை மற்றும் அறுவடை சார் பின் தொழில்நுட்ப முறைகள் பற்றியும் விவசாயிகளுக்கு விரிவாக கூறினார்.

வேளாண்மை அலுவலர் சுப்ரமணி இயற்கை விவசாயத்தின் நன்மைகள் பற்றியும் இயற்கை பூச்சி விரட்டி, பஞ்சகாவ்யா, மீன் அமிலம், ஜீவாமிர்தம், பயிர் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கமளித்தார்.

உதவி தோட்டக்கலை அலுவலர் சத்தியவேல் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மூலம் கொடுக்கப்படும் இடுபொருள்கள், மானியத் திட்டங்கள் பற்றியும் வேளாண்மைத் துறையில் செயல்படும் மானியத் திட்டங்கள் பற்றியும், இயற்கை வேளாண்மை ஊக்குவிக்கும் வகையில் உயிர் உரங்கள் பயன்பாடுகள் குறித்தும் விளக்கமளித்தார்.

ஊராட்சி மன்ற தலைவர் ரத்னம்மா கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மூலம் விவசாயிகள் அனைவரும் பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டார். உதவி தொழில்நுட்ப மேலாளர் ர.சிந்தனாஅட்மா திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும் உழவன் செயலியின் பயன்கள் மற்றும் உபயோகப் படுத்தும் முறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு கூறினார். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு சிறுதானியங்கள் சாகுபடி தொழில்நுட்ப துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

# பழனி அருகே கணக்கன்பட்டியில் மண் பரிசோதனை முகாம்



திண்டுக்கல், செப்.20

திண்டுக்கல் மாவட்டம், பழனி அருகே அக்ரோசெல் நிறுவனம் மற்றும் கணக்கன்பட்டி சற்குரு சபை இணைந்து கணக்கன்பட்டி சச்சிதானந்த சபையில் மண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இம்முகாமில் சென்னை தாம்பரம் சற்குரு சபை தலைவர் திருஞானம் தலைமை வகித்தார். அக்ரோசெல் நிறுவனத்தின் மண்டல மேலாளர் கவின் வரவேற்புரை ஆற்றினார். தொடர்ச்சியாக வேளாண்மை உதவி இயக்குநர் தகவல் மற்றும் தரக்கட்டுப்பாடு ராஜேஸ்வரி மண் பரிசோதனையின் முக்கியத்துவம் பற்றி கூறினார். வாகரை மக்காச்சோள ஆராய்ச்சி நிலைய இணைப்பேராசிரியர் டாக்டர் செல்வக்குமார் விவசாயிகளுக்கு மக்காச்சோள பயிர்களின் பயிர் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை குறித்து விவரித்தார். முன்னதாக ஒன்றியக்குழு உறுப்பினர் வேதாசலம் வேளாண்மை உதவி இயக்குநர் மக்காச்சோள ஆராய்ச்சி நிலைய இணைப்பேராசிரியர் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி துவங்கி வைத்தனர். இதில் நூறுக்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்கள் மண் மாதிரிகள் எடுத்து வந்து பரிசோதனைக்கு கொடுத்தனர். இந்த முகாமை அக்ரோசெல் நிறுவனத்தின் சார்பாக முகேஷ் ராஜ்வர்மன் காளீஸ்வரக்குமரன் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

# நோய் மேலாண்மையில் பசுந்தாள் உரப்பயிர்களின் பங்கு!

மண்ணின் வளத்தைப் பாதுகாக்க கரிமச்சத்தின் அளவை அதிகரிப்பதும் நிலை நிறுத்துவதும் மிக அவசியம்.பசுந்தாள் உரப்பயிர்களான கொளிஞ்சி, சணப்பு, தக்கைப்பூண்டு. நரிப்பயறு மற்றும் தட்டைப்பயறு ஆகியவற்றைப் பயிரிடும்போது கரிமச் சத்தின் அளவை அதிகரிக்கவும். களைகளை குறைக்கவும் மற்றும் மண்ணரிப்பைக் குறைக்கவும் வாய்ப்புள்ளது என்பதை நாம் அறிவோம்.

பசுந்தாள் உரப்பயிர்களை இயற்கை உரமாக பயன்படுத்தும் போது அவை மண்ணிலிருக்கும் பெரும்பாலான நோய்க் காரணி களின் எண்ணிக்கையைக் குறைப்பதில் பெரும் பங்கு வகிக் கின்றன. குறிப்பாக வேர் வாடல் மற்றும் வேர் அழுகல் நோய்களை உண்டாக்கிடும் பூஞ்சைகளின் எண்ணிக்கையை வெகுவாக குறைத்திருப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன. பசுந்தாளுரப் பயிர்கள் நன்மை செய்யும் நுண்ணுயிரிகளான ட்ரைக்கோடெர்மா, சூடோமோனாஸ், பேசில்லஸ் போன்றவற்றை ஊக்குவித்து பயிர் நோய்களின் தாக்கத்தினை குறைத்திருப்ப தாகவும் ஆராய்ச்சி முடிவுகள் உள்ளன. பசுந்தாள் உரப்பயிர்கள் பயிர்களில் நோய் களை தோற்றுவிக்கும் நோய்க்காரணிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதிலும், நோய்வித்துக்கள் முளைப்பதைக் குறைப்பதிலும், முளைக்கப்பட்ட நோய்க் காரணிகளின் வித்துக்களை செயல் இழக்கச் செய்வதிலும் பெரும் பங்கு வகிக்கின்றன.

மேற்கண்ட பசுந்தாள் உரப்பயிர்களை விவசாய பெருமக்கள் பயிரிட்டு மண்வளத்தை மேம்படுத்தி மறைமுகமாக நோய்க் காரணி களைக் கட்டுபடுத்தி மகசூலையும் அதிகரிக்கலாம் என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேலு தெரிவித்தார்.

# திண்ணியம் கிராமத்தில் விவசாயிகள் குழு கூட்டம் மற்றும் வயல்தின விழா

திருச்சி, செப்.20

அட்மா திட்டம் சார்பில் திண்ணியம் கிராமத்தில் விவசாயிகள் குழு கூட்டம் மற்றும் வயல்தின விழா அட்மா திட்ட துணை இயக்குநர் ஆனந்தசெல்வி தலைமையில் நடைபெற்றது.

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இரா.சுகுமார், வேளாண்மைத்துறை திட்டங்கள் பற்றி விவசாயிகளுக்கு வேளாண்மையில் உயிர் உரங்கள் பயன்படுத்துதல்,




இயற்கை வேளாண்மை, பாதுகாப்பாக பயிர் பாதுகாப்பு மருந்துகள் கையாளும் முறைகள், களைகொல்லி பயன்படுத்தும் முறைகள், வேளாண்மைத்துறை மானிய திட்டங்கள் பற்றியும், உழவன் செயலி பயன்படுத்துதல், கிராம முன்னேற்ற குழு அமைப்பது அவசியம் வேளாண்மைத்துறை மானிய திட்டங்கள் பற்றியும் விளக்கி கூறினார். வேளாண்மைத்துறை சார்பில் இடுபொருள், நெல் இரகங்கள், உயிர் உரங்கள், பயிர் பூஸ்டர்கள் பயன்படுத்திட கேட்டுகொண்டார். வேளாண்மை கல்வி நிலையம் சார்பில் டாக்டர்.விஜய், பூச்சியியல் துறை பேராசிரியர் நெல் ஒருங்கிணைத்த பயிர் பாதுகாப்பு முறைகள் மற்றும் பாதுகாப்பாக மருந்துகள் கையாளுதல் பற்றி விரிவாக விளக்கி கூறினார். கோ – 54 , நெல் ரக சிறப்புகள் பற்றி விவசாயிகள் கலந்துரையாடல் நடைபெற்றது.




மேலும் இந்த விவசாயிகள் குழு கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் புவனேஸ்வரி, வேளாண்மை அலுவலர் உழவர் பயிற்சி நிலையம் திருச்சி, நெல் சாகுபடி தொழில்நுட்பம் கையேடு மட்டும் துண்டு பிரசுரம் வழங்கினார். இதற்கான ஏற்பாட்டினை உதவி வேளாண்மை அலுவலர் விஸ்வநாதன், அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சபரிசெல்வன், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் கார்த்திக், ஆகியோர் செய்து இருந்தனர். இந்த குழு கூட்டத்தில் கலந்து கொண்ட 100 மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் செம்பரை, கோமகுடி, திண்ணியம் கலந்துகொண்டனர். ஜெயகண்ணன், அட்மா திட்டம்,வேளாண்மைத்துறைக்கு நன்றி தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.